ந.க.எண்: 238 /2021/அ1

முதல்நிலை பேரூராட்சி
சாம்பவர்வடகரை
நாள்:- 10.05.2022

**டெண்டர் விளம்பரம்**

சாம்பவர்வடகரை முதல்நிலை பேரூராட்சி பகுதியில் **2022–2023 , நமக்கு நாமே திட்டத்தின்** கீழ், கீழ்காணும் விபரப்படியான வேலைகள் செய்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் சாம்பவர்வடகரை பேரூராட்சி செயல் அலுவலரால் **25.05.2022** ம் தேதி புதன் கிழமை பிற்பகல் **3.00**மணி வரையிலும், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற டெண்டர்கள், வருகை தந்துள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் பிற்பகல் **3.30** மணியளவில் டெண்டர்கள் திறக்கப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | டெண்டர் ஷெட்யூல் விலை | டேவணி தொகை | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | சாம்பவர்வடகரை பேரூராட்சி 4–வது வார்டு கொம்புமாடசாமி கோவில் தெரு, 8–வது வார்டு மேலரதவீதி மேல்பகுதி, 9–வது வார்டு கிறிஸ்தவ தெருக்களின் கால்வாய் ஒரங்களில் தடுப்பு சுவர் அமைத்தல் | 20,00,000 | 6240 | 20000 | 180 நாட்கள் |

**டெண்டர் நிபந்தனைகள்**

1) டெண்டர் படிவத்தில் டெண்டர் கொடுக்கப்பட வேண்டும். டெண்டர் படிவம் ரூபாய் மற்றும் விற்பனைவரி சேர்த்து இவ்வலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும். செலுத்திய தொகை எக்காரணம் கொண்டும் திருப்பி கொடுக்கப்படமாட்டாது. டெண்டர் படிவம் **24.05.2022** செவ்வாய் கிழமை மாலை 3.00 மணி வரை மட்டுமே வழங்கப்படும்.
2) ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக டெண்டர் கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படும் டெண்டர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள டெண்டர் டிப்பாசிட் தொகையினை இவ்வலுவலகத்தில் ரொக்கமாகச் செலுத்தி, ரசீது டெண்டருடன் இணைக்க வேண்டும். டிப்பாசிட் தொகை செலுத்தாத டெண்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டிப்பாசிட் தொகைக்கு வட்டி கிடையாது.
3) டெண்டர் தேதியை மாற்றவோ, ஒத்திவைக்கவோ, செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.
4) டெண்டரில் அடித்தல், திருத்தல் கூடாது.
5) எவ்வித காரணமும் காட்டாமல் எந்த ஒரு டெண்டரையும் ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ, செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.
6) டெண்டர்கள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்குட்பட்டது.
7) ஜாரியான டெண்டர்தாரர்கள் ரூ 100/–மதிப்புள்ள முத்திரை காகிதத்தில் இந்த டெண்டர் தொடர்பான உடன்படிக்கை எழுதி கையொப்பமிட்டு செயல் அலுவலர் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.
8) ஒப்பந்த விதிகளின் படியும் நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள்ளாகவும், வேலை செய்து முடிக்கப்படாமல் இருப்பின், சாரி செய்யப்பட்ட டெண்டர் ரத்து செய்யப்பட்டு மறுடெண்டர் கோரப்பட்டு வேலை செய்யப்படும். இதனால் ஏற்படும் /சகலவிதமான இழப்புகளுக்கும் முதல் டெண்டர்தாரரே முழு பொறுப்பாக்கி அன்னாரிடம் மேற்படி இழப்புகள் வசூலிக்கப்படும்.
9) டெண்டர் கவர்கள் மூடி முத்திரையிடப்பட்டு கவரின் மேல் வேலையின் பெயரும் ஒப்பந்தக்காரர் முகவரியும் குறிப்பிட வேண்டும்.

10) வேலைக்கான கணக்குகள் முழுவதும் தணிக்கை செய்யப்பட்ட பின்னர் டேவணி தொகை திரும்ப வழங்கப்படும். ஒப்பந்தக்காரர் உள்ளாட்சி நிதிகணக்கு தணிக்கையாளர் தணிக்கைக்கு உட்பட்டவர் ஆவார். தணிக்கை ஆட்சேபனை எந்த தொகையேனம் அல்லது செலவினையும் திரும்பப்பெற தெரிவிப்பின் சம்பந்தப்பட்ட வேலையைச் செய்யும் ஒப்பந்தக்காரரே பொறுப்பாவார்.

11) இந்த டெண்டரில் குறிப்பிட்டபடி வேலைக்குரிய உடன்படிக்கை எழுதி முடிந்ததும் வேலையை துவக்கி வேலை உத்திரவில் கண்டுள்ள கால வரம்பிற்குள் வேலையை முடிக்கப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள் வேலை செய்து முடிக்காவிடில் வேலை மதிப்பு தொகையில் ரூ .100/—க்கு பைசா 0.50மேற்படாமல் பேரூராட்சி செயல் அலுவலர், ஒப்பந்தக்காரர் மீது அபதாரம் விதிக்கலாம். அவ்வாறு விதிக்கப்படும் அபதாரம் சம்பந்தப்பட்ட வேலைக்கோ அல்லது வேறு எந்த வேலைக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுக்கவோ, பின்னர் அவருக்கு சேர வேண்டியதாகவோ இருக்கும் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும். மேலும் ஒப்பந்தக்கால வரம்பிற்குள் வேலையை செய்து முடிக்காத காரணத்தால் ஏற்படும் இழப்புகளுக்கு பேரூராட்சி ஒப்பந்தக்காரர் மீது தாவா செய்யலாம். அபதாரம் விதிக்கப்பட்ட பின்னரும் வேலை விரைவாகவும் தரமானதாகவும் செய்யப்படவில்லையென செயல் அலுவலர் கருதினால் ஒப்பந்த டேவணி பறிமுதல் செய்து பேரூராட்சி நிதிக்கு ஈடு செய்யப்படும் பொருட்களைக் கொண்டு முடிக்க உத்தரவிட செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினங்கள் அனைத்தும் ஒப்பந்தக்காரரிடம் பிடித்தம் செய்யப்படும்.

12) இதர விபரங்கள் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் நேரில் அறிந்து கொள்ளலாம்.

13) படிவத்தில் குறிப்பிட்ட பணிகள் அரசு திட்டப்பணிகளாகும். எனவே, உரிய திட்டப்பணிக்கான அரசுநிதி வரப்பெற்ற பின் பணம் பட்டுவாடா செய்யப்படும்.

(ஒ/ம்) xxxxxxxxxxx

**செயல் அலுவலர்**
**முதல்நிலை பேரூராட்சி**
**சாம்பவர்வடகரை.**
**தென்காசி மாவட்டம்**

**குறிப்பு**

பொது சுகாதார மேற்பார்வையாளர் (பொ) இவ்விளம்பரத்தை பேரூராட்சி பகுதி முழுவதும் டாம் டாம் மூலம் விளம்பரம் செய்து உரிய அத்தாட்சியுடன் திரும்ப சமர்ப்பிக்க பணிக்கப்படுகிறது.

**<u>பெறுநர்:—</u>**

பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்கள் , சாம்பவர்வடகரை பேரூராட்சி

**நகல்:-**

1) திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவிஇயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2) உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) தென்காசி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
3) தலைவர், ஆய்க்குடி பேரூராட்சி .
4) இளநிலை பொறியாளர் (பேரூராட்சிகள்) தலைமையிடம் சுரண்டை பேரூராட்சி.
5) செயல் அலுவலர் /பேரூராட்சி ஆய்க்குடி, சுரண்டை, சுந்தரபாண்டியபுரம், மேலகரம், அச்சன்புதூர், பண்பொழி, அலுவலக விளம்பரப் பலகைகளில் ஒட்டி விளம்பரம் செய்ய
6) அலுவலக விளம்பர பலகை.